மாம்பழக் கவிச்சிங்கம்

மனிதனின் நாகரிகம் மொழி
மொழியின் நாகரிகம் கவிதை

என்பார்கள். கவிதையைப் படைப்பவன் கவிஞன். காலந்தோறும், கவிஞனும், அவனது கவிதைகளும் என்றும் நிலை நிற்கும்.

என்றுமுள செந்தமிழில் கவிதை புனைந்தோர் எண்ணற்றோர். ஆயினும் கால வெள்ளத்தில் சிலரே நிற்கின்றனர். சிறந்த கவிதையும் அதைப் படைத்த கவிஞனும் என்றும் நிற்பார்கள்.

தமிழ்க் கவிதையின் வளமும், அதைப் படைத்த புலவர் திறனும், தமிழ் நாட்டில் தமிழ் அரசர்க்குப் பின்னர் குன்றியது. ஆயினும் ஆங்காங்கே சில புலவர்கள் தோன்றி தமிழை வளப்படுத்தினர்; வாழ வைத்தனர்.

19ஆம் நூற்றாண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். தமிழைப் படிப்பது தவறு என்று மக்கள் நினைத்த காலம். இந்தக் காலக் கட்டத்தில், மூன்று பெரும் புலவர்கள் தமிழ் நாட்டில் திகழ்ந்தார்கள். அவர்கள்

1. மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
2. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
3. மாம்பழக் கவிச்சிங்கம் நாவலர்.

இவர்களில் மகாவித்துவான், திருவாவடுதுறை ஆதீனத்தால் ஆதரிக்கப்பெற்று, ஆதீனப் புலவராகத் திகழ்ந்தார்.

வண்ணச்சரபம், முருகனருள் பெற்று, "கௌமாரம்" என்கிற முருக வழிபாட்டு நெறியை முன்னிலைப்படுத்தி தமிழகம் எங்கும் சென்று இறுதியில் விழுப்புரத்துக்கு அருகில் உள்ள திருவாமாத்தூரில் சமாதி ஆனார்.

மூன்றாவதான மாம்பழக் கவிச்சிங்க நாவலர், பெயருக்கு ஏற்ப கவிச்சிங்கமாத் திகழ்ந்திருக்கிறார். அந்தக் கால அரசர்கள், ஜமீன்தாரர்கள், மிட்டாதாரர்கள், பிரபுக்கள் ஆகியோரால் ஆதரிக்கப்பெற்று, பீடு நடைபோட்ட பெரும் புலவராகத் திகழ்ந்துள்ளார்.

இவர் தோன்றிய ஊர் பழனி. இவரது தந்தையார் முத்தையனாச்சாரி என்பவர் பொற்கொல்லர் மரபினர், 1836ஆம் ஆண்டு தோன்றியுள்ளார். பிறந்த மூன்றாம் ஆண்டு, வைசூரி என்னும் அம்மை நோய் வந்தது. வந்த அம்மை நோய், போகும்போது, இவர் கண் ஒளியையும் பறித்துச் சென்று விட்டது. இது கண்டு வருந்திய தந்தை, விளையாட்டாக, குழந்தையின் முதுகில் எழுத்துக்களை எழுதிக் காண்பிக்க, குழந்தை மிகவும் அற்புதமான முறையில் அறிந்து கொண்டது.

இவ்வாறு தமிழ், வடமொழி ஆகியவற்றில் மொழித்திறனையும், இசை, ஜோதிடம் முதலிய பல்வேறு கலைகளிலும் இக்குழந்தை சிறந்து வளர்ந்தது.

இந்த மரபினருக்கு "மாம்பழம்" என்கிற சிறப்பு அடைமொழி உண்டு. இப்பட்டம், மதுரையை ஆண்ட திருமலை மன்னரால், இம்மரபினரின் முன்னோர்களில் ஒருவருக்கு வழங்கப்பட்டது என்பர்.

இக்கவிஞர்பிரானின் இயற்பெயர் பழனிச்சாமி என்பதாகும். இவ்வாறு கல்வி, கேள்விகளில் சிறந்த இக்கவிஞர்பிரான், தம்மைப் போற்றும் தக்க பிரபுவைத் தேடினார்.

அந்தக்காலத்தில், இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னர் ஒருவரே, தமிழ்ப்புலவர்களை ஆதரித்து வந்தார். அப்போது இருந்த மன்னர் முத்து இராமலிங்க சேதுபதி ஆகும். இவர் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர். ஆங்கிலேய அரசு இவர் இறக்கும் வரையிலும் இவரை சிறையில் வைத்திருந்தது. இவர் மன்னராக வீற்றிருந்தது சொற்ப காலமே ஆகும். இவர் சிறைப்பட்டதும், இவரது உடன்பிறப்பான பொன்னுச்சாமித் தேவர், மன்னருக்கான பொறுப்பினராக விளங்கினார்.

தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் இராமநாதபுர வள்ளலைக் காண, பழனியில் இருந்து சென்றார் நம் புலவர். ஆனால் விதியோ வேறு விதமாக இருந்தது.

இராமநாதபுரம் அரசருக்கு கையேட்டினர் எனப்படும், தமது உதவியாளர்கள் மூலம் சீட்டுக்கவி அனுப்பினார் புலவர்.

அக்கவியின் அருமையை வியந்த மன்னர், புலவரை உடனே காண விரும்பினார். ஆனால் "உடற்குறையுள்ள" ஒருவரை அரசர் காணல் ஆகாது என்கிற அக்கால மரபுப்படி, இப்புலவரைப் பார்ப்பதை அரசர் தவிர்த்தார்.

எவ்வாறேனும், அரசரைப் பார்த்தே ஆகவேண்டும் என்கிற உள்ள உறுதியுடன் இராமநாதபுரத்திலேயே நம் புலவர் மாம்பழம் தங்கினார். அங்குள்ள புலவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார்.

ஒருநாள் அரசர் சேதுபதி, வடமொழியில் உள்ள, திருமகள் தோத்திரம் ஒன்றை, தமிழ்ப்படுத்தித் தர இயலுமா என்று அவைக்களப் புலவர்களிடம் கேட்டார். அவர்கள் மறுநாள் தருவதாகக் கூறி வந்துவிட்டனர். அவர்களில் ஒருவர், வடமொழிப்பாடலை நமது மாம்பழத்திடம் கூறினார். இக்கவிஞர்பிரான் உடனே அதை தமிழ்பாவில் படித்துக் காட்டினார்.

அம்புயமென் றாதுசகி யாதுனது தாள்சகிமா
ரம்புநிகர் பார்வைசகி யாதுமெய்யங் - வம்புயங்கை
தாங்கலம்மெய் மால்வலுரஞ் சார்தவரி தென்னிலென்வாய்
வீங்குரை யாற்றும் கொற்ரு வே.

இப்பாடலை மற்ற புலவர்கள் எடுத்துச் சென்று, மன்னரிடம் கொடுத்து, விபரங்களைக் கூறினார். மன்னர் உடனே மாம்பழக் கவிஞரை அவைக்கு அழைத்து வரும்படி ஆணையிட்டார்.

மன்னவர் முன் வந்ததும், அவர் மீது இரண்டு பாடல்கள் அதே இடத்தில் பாடி வாழ்த்தினார் புலவர். மகிழ்ந்த மன்னர், இவரது புலமையை மேலும் சோதிக்க விரும்பினார். அக்கால மரபுப்படி வெண்பாவின் ஈற்றடியைக் கொடுப்பார்கள். மேலே உள்ள மூன்று அடியைப் புலவர்கள் பூர்த்தி செய்துபாட வேண்டும்.

இவ்வாறு மன்னர்,

"கிரியில் கிரிஉருகும் கேட்டு" என்று ஈற்றடி கொடுத்தார்.

இதன் பொருள் "மலையில் மலைஉருகும்" என்பதாகும். மிகவும் கடினமானது. ஆனால் புலவர், பின்வருமாறு பாடி வெண்பாவை முடித்தார்.

"மாலாம் பொன்னுச்சாமி மன்னர்பிரான் தன்னாட்டில்
சேலாம்கண் மங்கையர்வா சிக்கும்நல்யாழ் - நீலாம்
பரியிற் பெரியகொடும் பாலைகுளிரும் ஆ
கிரியிற் கிரியுருகுங் கேட்டு."

<u>இதன் பொருள்:</u>

திருமால் போன்ற பொன்னுச்சாமி மன்னர் நாட்டில், மீன் போன்ற கண்களை உடைய பெண்கள் யாழ் வாசிக்கின்றார்கள். அவர்கள் வாசிக்கும் நீலாம்பரி இராகத்தைக் கேட்டால், பெரிய கொடிய பாலைவனம் குளிர்ச்சியாகும். அதுபோல் ஆகிரி இராகத்தைக் கேட்டால், மலையும் கூட உருகும் என்பதாகும். ஆகிரி என்பதில் "ஆ" என்ற ஓர் எழுத்தை மேலே இட்டார். புலமைத் திறத்தைக் கண்டு மன்னர் மகிழ்ச்சி அமைத்தார். மேலும் பல பாடல்கள் பாடச் சொல்லி சோதனை செய்தார்.

"எலிக்கும் புலிக்கும்" சிலேடை பாடச் சொன்னார்.

"பாயும் கடிக்கும் பசுகருவாடும் புசிக்கும்
சாயும் குன்றில் தாவிச் சஞ்சரிக்கும் தூயபுகழ்
தேங்குமுத்து ராமலிங்கச் சேதுபதிப் பாண்டியனே
வேங்கை ஒரு சிற்றெலியாமே" என்று விடை பகர்ந்தார்.

ஒரு வெண்பாவில் நான்கு முறை 'காசி' என்ற சொல் வருமாறு பாடக் கேட்டார். புலவர் பாடினார். ஆறுமுறை 'காசி' என்ற சொல் வருமாறு கூறினார். புலவரும் அவ்வாறே பாடினார். இறுதியாக பதினான்கு தடவை 'காசி' என்ற சொல்வருமாறு பாடமுடியுமோ? என்று வினவினார். உடனே நமது புலவர் பாடினார்

"காசினிபுக் காசிவருங் காசிவணிக் காசிறியேற்
காசிததே காசினநா காசிவைபா - காசிலையோற்
காசிவண்வா காசிவதுங் காசிவமோங் காசிவழாக்
காசிவர் தாழ் காசிவளா கா".

இதைக் கேட்டதும் மன்னர் அதிர்ந்து விட்டார். புலவரின் புலமையை முற்றிலும் உணர்ந்தார். புலவரின் கண்ணில் ஆதவன் உள்ளார். இவர் கண்ணில்லாதவர் இல்லை. இன்று முதல் இவர், கவிச்சிங்கம் என்று அழைக்கப்படுவார் என்று அறிவித்தார். அம்மட்டும் இல்லை; சேதுபதி மன்னர், கண்ணில்லாத இந்த புலவரின் தலையில் பட்டுப் பீதாம்பரம் கொண்டு உருமால் கட்டி விட்டார். இவ்வாறு உருமால் கட்டி விளங்குவது அக்காலத்தில் பெரும் சிறப்பு ஆகும். மேலும் சிவிகை, ஆடைகள், பொன் முதலிய பல சன்மானங்களை

வழங்கி, தாமே புலவருக்கு சந்தனம் வழங்கினார். அப்போது, நம் புலவர், "சந்தனம்" என்ற சொல் ஏழு இடங்களில் வருமாறு பாடினார்.

"கந்தச் சந்தனம் மெய்யிற் பொருக்கெழக் கனவசந்தனம் பால் உன்றன் மோகமே
முந்தச் சந்தனம் மேவிச் செந்தேனும் அமுதுங்கசந்தனம் என்றே மயங்கினாள்".
இந்தச் சந்தன குந்தரனம் புனைந்து எடுக்க சந்தனம் மின்னிவிட்டுச் சுகந்தந்தச்
சந்தன தெவ்வமும் தீர்ந்திடத் தயவுகூர் பொன்னுச்சாமி நரேந்திரனே"

இவ்வாறு சேதுபதி மன்னரின் ஆதரவில் அவரது அவையில் சிறந்த புலவராக மாம்பழம் விளங்கினார். அவரது இயற்பெயர் மறைந்து அவர் "மாம்பழக் கவிச்சிங்கம்" என்றே வழங்கப் பெற்றார்.

தமிழ்க் கற்றவர்களுக்கு இயல்பாக ஒரு பெருமித உணர்வு உண்டு. தமிழ்ப்புலவர்களுக்கு அதிகம் பெருமிதம் உண்டு. ஆனால் அத்தகைய பெருமித உணர்வால் தான் தாங்களும் சிறந்து விளங்கினார்கள். தாங்கள் கற்ற தமிழையும் சிறப்பித்தார்கள்.

தமிழைப் போற்றுகின்ற மன்னர்கள் இடைக்காலத்தில் குறைந்தார்கள். ஆனாலும் அவ்வப்போது, தமிழ் உணர்வும், தமிழறிவும் சிறந்த அறிஞர்கள் அரசர்களாகத் திழ்ந்தனர். அவர்கள் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தனர்; போற்றினர். இராமநாதபுரம் மன்னர் ஒருவரே அக்காலத்தில் சிறந்த தமிழ் அறிஞராகவும், புலவராகவும் திகழ்ந்தார். தமிழ்ப் புலவர்கள் அவரது அரசவையை அணுகினார்.

ஒரு தடவை விசுவநாத பாரதி என்ற புலவர், சேதுபதியின் அவைக்களத்திற்கு வந்தார். அரசர் முன்னர் அவர் இயற்றிய சரகம் ஒன்றை அரங்கேற்ற விரும்பினார். அரசரும் அனுமதி வழங்கினார். அப்போது விசுவநாத பாரதி, மன்னர் அவையில் கண்ணிழந்த மாம்பழமும் அமர்ந்திருப்பதைக் கண்டார். அரசரிடம் மெதுவாக, "அரசே! சபை, மங்கலமாக இல்லையே" என்றார். அரசர் புரிந்துகொண்டார் "சபை மங்கலமாகவே உள்ளது, நீர் நூலைக் கூறலாம்" என்றார். மாம்பழமும் இதை உணர்ந்து கொண்டார்.

புலவர் விசுவநாத பாரதி, அரசவையில் தான் கொண்டு வந்திருந்த, "சதகம்" எனப்படும், நூறு பாடல்களை அரங்கேற்றினார். அதன் பின்னர், சேதுபதி மன்னர், "இந்த நூல் தொடர்பாக, நமது புலவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறலாமே!" என்றார். உடன் நமது

மாம்பழம் எழுந்தார்: கூறினார், "அரசே, இந்த நூறு பாடல்களும் அடியேன் இயற்றியவை ஒவ்வொரு பாடலின் கடைசி இரண்டு அடிகள் வேறு ஒருவரைப் பாராட்டி நான் பாடியவை" என்றார். புலவர் பாரதி திடுக்கிட்டார். "இல்லை, இல்லை, இவை நான் பாடியவையே" என்றார். சேதுபதி மன்னர், மாம்பழத்தைப் பார்த்து, "நீங்கள் பாடியவை என்றால், ஒன்றிரண்டு பாடல்களை கூறலாமே" என்றார்.

மாம்பழமோ, "ஒரு பாடல் என்ன, நூறு பாடல்களையும் திருப்பிப் பாடிவேன் என்று கூறி புலவர் விசுவநாத பாரதி பாடிய நூறு பாடல்களையும் திருப்பிப் பாடினார். அதுவும் ஒவ்வொரு பாடலின் இறுதி இரண்டு அடிகளில் வேறு ஒருவரைப் போற்றிப் பாடினார்".

உடனே, புதிதாக வந்த புலவர் மீது மன்னர் கோபமுற்றார், புலவர் விசுவநாத பாரதி, மாம்பழத்தின் கால்களைப் பற்றி பணிந்தார். "இப்பாடல்கள் நான் பாடியவையே" நீங்கள் சரசுவதியின் அருள் பெற்றவர்கள், உண்மையை உணர்த்த வேண்டும் என்று வேண்டினார். மாம்பழமும், அரசரைப் பார்த்து, "அரசே இந்நூல் இந்தப் புலவர் பாடியதுதான். நூலை அரங்கேற்று முன்னர், என் உடற்குறையைக் குறித்துச் "சபை மங்கலமாக இல்லையே" என்றதனால் இவ்வாறு செய்தேன். மேலும் எனக்கு எவரேனும், ஒன்றை ஒரு தடவை கூறினால் மனப்பாடம் ஆகிவிடும். இதை "ஏக சந்தக் கிராகி" என்பார்கள். இதை அரசர்க்கு வெளிப்படுத்தவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்தது என்று கூறி, புலவர், விசுவநாத பாரதிக்கு உரிய பரிசுகளை வழங்குமாறு வேண்டினார்.

சேதுபதி மன்னர், அன்றுமுதல் மாம்பழத்தை, "முத்தமிழ்ச் சக்கரவர்த்தி" என்று அறிவித்தார்.

இவ்வாறு பெரும்புலமை கொண்டவராகத் திகழ்ந்தார் மாம்பழம். தனது உடல்நிலை கருதி, மாம்பழம் தனது சொந்த ஊரான பழனிக்குச் செல்ல விரும்பினார். மன்னர் தக்க பரிசுகளுடன் விடை அனுப்பினார்.

எங்கு சென்றாலும் மாம்பழம் பெரும்பாலும் பல்லக்கில்தான் சென்றார். நீண்டதூரம் செல்லும்போது, பெட்டி வண்டி, பரிவாரங்கள் மற்றும் ஏடு எழுதுவோர் ஆகியோருடன் சென்றார்.

எந்தப் பிரபுவிடம் கோரிக்கை வைக்கும்போது மிகவும் பெருமித உணர்வுடனே வேண்டியுள்ளார்.

சான்றாக, ஒரு பிரபுவிடம், தமக்கு என்ன வேண்டும் என்பதைப் பெருமிதத்துடன்தான் கேட்டுள்ளார்.

"அடர்தொடையில் அணிமுத்து வேங்கடாத்ரி விஜயஅன்பன் எதிர்கொண்டு காண்க
அதிகமதியூகி என்று உனது சமூகத்தை ஆவலோடு தேடிவந்தோம் -
ஆதலால், மனதில் மிகழ்வாக உடனே வரவழைத்து நற்கவிதை வினவி
அமை, பெட்டிவண்டியோடு இரண்டு எருது நூறு பொன் அசுவமும் தரல்வேண்டுமே".

தம்மைப் பற்றி குறிப்பிடும் போது,

"தடமகுட விபுதர்பணி சரணசிவ குமரகுரு தனது கருணாவிலாசம்
தவளவடிவுடையநய சரஸ்வதி கடாட்ச வீட்சணகலைக் ஞானபீடம்
சகலஉசிதப்ரபந்தமும் நொடிதனிற் சொலும் சண்டபிரசண்ட வாக்யம்
தமிழருமை தெரியாத சண்டாளர் மார்பைத் தடாதரிக்கும் வஜ்ராயுதம்......
சேதுபதி சமூகம் மெச்சிய மாம்பழக் கவிச்சிங்கம் எழுதிய வாசகம்."

என்று மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார். எவருக்கும் பணியாத தமிழ்ப்புலவர்கள் வரிசையில் வந்தவர் இவர்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்பவர் பெரும்புலவரும், முருகன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். கௌமார நெறி என்ற தனி நெறியை வகுத்தவர். ஒருமுறை திருவனந்தபுரம் மன்னரைக் காணச் சென்றார். சேவகர்கள் மன்னர் முன் செல்லும்போது தலை தாழ்த்தி வணங்கியபடி செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினர்.

"எங்கும் புலராது, யார்க்கும் இளையாது,
பொங்கு தமிழைப் பொழியும் வாய் - நம்குகவேள்
இன்னருள் செய்யான் எனினும் எழிற்கேரளநாட்டு
மன்னனிடம் வாய் புதைக்குமோ"

என்முருகன் எனக்கு அருள் செய்கிறானோ இல்லையோ, தமிழறிந்த நான் ஒரு சாதாரண மன்னன் முன் தலைகவிழ்க்க மாட்டேன் என்றுகூறி, மன்னரைப் பாராமலேயே திரும்பிவிட்டார்.

இத்தகைய இயல்புடைவர்கள் தாம் உண்மையான தமிழ்ப்புலவர்கள்.

நமது மாம்பழமும் இது போன்றவர்தான். அவர் பார்க்கச் செல்லும் எந்தப் பிரபுவும் உடனே அவரைக் கண்டு கவிதையைக் கேட்டு, பரிசு நல்க வேண்டும். இல்லை என்றால் ஒரு பாட்டுப் பாடிவிட்டுத் திரும்பிவிடுவாராம்.

பல பிரபுக்கள் இவரது பெயரைக் கேட்டாலே அஞ்சுவார்கள் என்று வரலாற்றில் தெரிகிறது. ஆய்க்குடி ஜமீன் மேலாளருக்கு எழுதிய சீட்டுக்கவியில் இறுதியில் இவ்வாறு தெரிவிக்கிறார்.

"இடமுழுவதும் செல்லும் எங்கள் வித்வான்கள் என்ன கிள்ளுக்கீரையோ,
இனிய சொந்தப்பிரபுவெனத் துணிந்து எண்ணி இதை எழுதினோம் உன்னையன்றி
எவர் நமக்காதரவு நீ பாராமுகமாயிந்தால் சுமாவிடுவமா,
எல்லா(ம்) முடிக்க வேண்டுவது உனது கடமை இனிஇது தேர்ந்து கொள்ளவேண்டுமே".

தமிழ்ப்புலவர்கள் என்ன "கிள்ளுக்கீரை" என்றா நினைத்துக் கொண்டீர்கள் என்று கேட்கும் துணிச்சல் இவருக்கு இருந்துள்ளது. நக்கீரர் வழி வந்த புலவரல்லவர் இவர்.

தனது வசைப்பாடலினால் அழிந்தவர் பலர் என்றும், தனது வாழ்த்தினால் உயர்ந்தவர் பலர் என்றும் தன் கவிதையில் குறிப்பிடுகின்றார்.

இவர் பொள்ளாச்சி அருகில் உள்ள ஆனைமலைப்பக்கம் சென்றபோது, ஒரு தென்னந்தோப்பின் உரிமையாளரைப் பாத்து ஒரு இளநீர் கேட்டார். தோப்புக்காரர் மறுத்துவிட்டார். அதனால் இவர் வசைப்பாடினார் என்றும், அன்று முதல் அத்தென்னந்தோப்பில் ஒரு மரம்கூட காய்ப்பதில்லை என்று இன்றும் சொல்லப்படுகிறது.

இதைத் தன்னுடைய பாடல்களிலும் தெரிவிக்கிறார்.

'அன்பிலாதவரிடத்து அணுகினோம், ஒருவேளை
அணுகினும் சும்மாவிடோம்;
ஆயிரம் வசை பாடியாகினும் தூற்றுவோம்;
அதில் அழிந்தவர் அனந்தர்;
அறிவாளர் தம்மை வலியத்தேடி வாழ்த்துவோம்
அதில் வாழ்ந்தபேர்கள் கோடி........

இவ்வாறு, கவிஞன் என்ற செருக்கோடும், செம்மாப்போடும், அந்தணனாக இருந்தாலும், கண்ணில் ஆதவன் விளங்க, அருந்தமிழ்ப் பெரும்புலவனாக வாழ்ந்திருக்கிறார்.

தமிழ்நாடு முழுமையும் அவர் சுற்றி வந்துள்ளார். குறிப்பாகத் தமிழகத்தின் மேற்குப் புறமான கொங்குநாடு மற்றும் தென் தமிழ்நாடு இங்கு உள்ள பிரபுக்களையும், ஜமீன்தாரர்களையும் பார்த்துப் பாடியுள்ளார். அங்கங்கு தன் புலமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

தென்பாண்டிபாட்டில், சொக்கம்பட்டி என்ற ஊரில் ஒரு ஜமீன் இருந்தது. அந்த ஜமீனின் மேலாளராக அப்போது ஆபத்துக்காத்தபிள்ளை என்பவர் இருந்தார். "வெண்பா" என்ற தமிழ்ப்பா பாடுவது மிகவும் கடினம். ஆகவே, வெண்பா புலவர்க்குப் புலி என்று ஒரு பழமொழி உண்டு.

ஆபத்துக்காத்த பிள்ளையோ, பேசுவதே வெண்பாவாக இருக்கும். அந்த ஜமீனுக்கு ஒரு தடவை நமது மாம்பழம் சென்றார். ஜமீன்தாரரைப் பார்த்து பேசிவிட்டார். பழனிக்குத் திரும்ப வேண்டியதுதான் பாக்கி. மரபுப்படி மேலாளர் ஆபத்துக்காத்த பிள்ளையைப் பார்க்கச் சென்றார். பிள்ளை சாதுர்யமாக, மாம்பழத்தைப் பரிட்சிக்க ஆரம்பித்தார்.

"முன்பு போகன் சமூகத்தில் இருந்த காளிதாசன் போல்இல்லை எந்த வித்வானும் என்பார்கள். நல்ல புத்திமான் மாம்பழக் கவிச்சிங்கத்துக்கு ஒப்பில்லை என்பேன் நிச்சயம்இது".

உண்மையில் இது வெண்பாவாகும்.

"முன்புபோ கன்ச மூகத்திருந்த காளிதா
சன்போ லிலையெந் தவித்வானு - மென்பார்கள்
நல்லபுத்தி மான்மாம்ப ழக்கவிச்சிங் கத்துக்கொப்
பில்லையென்பேன் நிச்சய மிது.

மாம்பழத்துக்கா புரியாது. பின்வருமாறு பதில் கூறினார்.

நமது துரையவர்களைக்காண இன்றைக்கு மனது துடிக்குது. கண்டு முறையிட்டுக் கொள்வது உசிதமோ கூடாததோ சொல்லுங்கள் பிள்ளை அவர்களே.

"நமது துரையவர்க ளைக்காண வின்றைக்
குமன சுதுடிக்குதுகண் - டுமறையிட்டுக்
கொள்வ துசிதமோ கூடாத தோசொல்லுங்
கள்பி ளையவர் களே.

மீண்டும் பிள்ளை வெண்பாவில் பதில் கூறினார். அய்யா, கவிராயர் அவர்களே, தங்களுக்குச் செய்யும் மரியாதி விஷயத்தில் அய்யனும் நானும் சொன்னோம். நம் எசமானும் சரி என்று ஒப்பி மனசும் சுமூகமாச்சுது.

"அய்யா கவிராய ரவர்களே தங்களுக்குச்
செய்யு மரியா திவிஷயத்தி - லையருநா
னுஞ்சொன்னோ நம்மெசமா னுஞ்சரியென் றொப்பிமன
சுஞ்சு முகமாச் சுது.

மீண்டும், மாம்பழம் பதில் வெண்பா கூறினார். "தாங்கள் அறியாத சமாசாரம் என்ன. உத்தரவு வாங்கி என்னை ஊருக்கு அனுப்பி வைப்பதற்கு எல்லாம் கிருபைதான் வேண்டும். மேனேஜர்ரவர்களே! மெத்த நம்பினேன். வீண் பேச்சல்ல நிஜம்".

"தாங்களறி யாதசமா சாரமென்ன வுத்தரவு
வாங்கியென்னை யூர்க்கனுப்பி வைப்பதற்கெல் - லாங்கிருபை
தான் வேண்டும் மேனே ஜர்வர்களே மெத்தநம்பி
னேன்வீண்பேச் சல்ல நிசம்".

பிள்ளை மலைத்துவிட்டார். அவர் எத்தனையோ ஆண்டுகளாகப் பயிற்சி பெற்று, பேசுவதையே வெண்பாவாக்கி வருகிறார். ஆனால் புதிதாக ஒருவர் எடுத்த எடுப்பிலேயே வெண்பாவை உரையாகப் பாடினால் அவர் எத்தனை புலமையாளர். பிள்ளை மிகவும் மகிழ்ந்து பின்வருமாறு கூறிப் பாராட்டினார்.

"கம்பனும் ஒட்டக்கூத்தனும் புகழேந்தியும் காளமேக-
-மும், படிக் காசுத்தம்பி ரானும், பரஞ்சோதி முனிவனுஞ்சிற்
றம்பலமும், வெண்பாப் புலியும், வால சிம்மமும் மற்றவித்வான்க
ளும்பழனி மாம்பழக் கவிச்சிங்கத் துக்கிணையா வுலகத்தீரே".

இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் புலவர் வாழ்வில் நடந்துள்ளன. அவற்றில் எல்லாம் அவர் வென்றுள்ளார் என்பதுடன் தமிழின் பெருமையை நிலை நாட்டியுள்ளார் என்பதுதான் சிறப்பான உண்மையாகும்.

அவர் பாடிய பாடல்கள் பல மறைந்துவிட்டன. மார்க்கயன் கோட்டையைச் சார்ந்த, பழனிச்சாமி ஆச்சாரி என்பவர் தமிழகம் எங்கும் அலைந்து தேடி, கிடைத்தவற்றை 1908ஆம் ஆண்டு பதிப்பித்தார். "அழிந்து போனவை அனந்தம், கிடைத்த பாடல்களோ சொற்பம் என்று குறிப்பிடுகிறார்".

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் நமது மாம்பழத்தின் பாடல்களில் மிகவும் விருப்பமுடையவர்.

"செந்தமிழ் மொழியின் ஐந்திலக் கணமுஞ்
சிந்தையே ஏடாய்த் திரிபின்று உணர்ந்தேன்
அவரவர் கருத்தை நயனுற அறிந்தே
வேகமா கக்காள மேகமே என்னப்
பாகுபு ஏத்தகை கூடிய தீரன்.
ஏகசந்தக் கிராகி இவன் எனப்
பாக கந்தக் கவி பாடுவோன்......
தேம்பழம் எனத் தித்திடப் பாடி
மாம்பழக் கவிஎனும் மாப்பெயர் படைத்தே
இக்கார் விழுச்சுவை அக்காரக் கனி
நச்சுமனார் எனும் நாவலன்".

என்று பாராட்டிப் போற்றுவார்.

மாம்பழக் கவிச்சிங்கம் பாடியதாக இப்போது நமக்குக் கிடைப்பன, இவைதாம்.

1. விநாயக மூர்த்தி பதிகம்
2. சரஸ்வதி அம்மன் பஞ்சரத்னம்
3. சந்தப்புகழ்
4. பழனிப் பதிகம்
5. குமர குருபதிகம்
6. சிவகிரிப் பதிகம்
7. திருச்செந்தில் பதிகம்
8. பழனி நான்மணிமாலை
9. திருப்பழனி வெண்பா 103
10. பழனி வெண்பா அந்தாதி - 100
11. பழனா புரிமாலை

12. குமரன் அந்தாதி
13. சிவகரியமக அந்தாதி
14. பழனிக் கோயில் விண்ணப்பம்
15. தயாநிதிக் கண்ணிகள்
16. துதிகள்

இவரின் பாடல்களுக்கு உரை காண்பது மிகவும் கடினம். பல பாடல்கள் எளிதில் இருந்தாலும், யமகம், திரிபு முதலியவற்றின் பொருள் காண்பது அரிது. சென்ற 20ஆம் நூற்றாண்டில் பழனியில் வாழ்ந்த பெரும்புலவர் திரு. இல. பழனிச்சாமி என்பவர், மாம்பழத்தின் பாடல்களில் மிகவும் தோய்ந்தவர். அவர் மாம்பழத்தின் பாடல்கள் முழுமைக்கும் உரை எழுதினார். அதை, மதிப்பிற்குரிய அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

இவருடைய பாடல்கள் கற்பனை நயம் மிகுந்தவை. வடமொழிச் சொற்கள் அதிகம் உண்டு. ஆனால் இது அக்கால வழக்கு. விநாயகர் மீது பாடிய அருமையான பாடல் ஒன்றைப் பார்க்கலாம்.

"சீர் கொண்ட கிரண சந்திரசடா மகுடமும் திரியம்ப காம்போஜமும்
திடகரட கடவிகட ஜயகும்ப கம்பீர திவ்யகுஞ்சர வதனமும்
தார் கொண்ட பரிமள சதுர்புய விலாசமும் தரள எக்ஞோபகவீத
தடமார்பலம் போதர ப்ரவாகமும் உசித தவளாம்ப ரானந்தமும்
கூர் கொண்ட பாசாங்கு சாஸ்தமும் கிண்கிணி குலுங்குபதமுங் கண்டுயான்
கும்பிட்டு இறைஞ்சஅருள் கூர்ந்துதவ வேண்டும் நயகுண சகல பரிபூரண
வார் கொண்ட களபதன வல்லபை மனோகரா வளமுறும் துறைகள் தோறும்
மருவு பிரணவ வேத சொருபசமரசநீத வரதசிவ கண நாதனே".

<u>இதன் பொருள்:</u>

சத்துவ குண பரிபூரணரே! வல்லபை நாயகரே! தண்ணீர்த்துறைகள்தோறும் அமர்ந்துள்ள பிரணவ வடிவமான கணநாதரே! பிரகாசமான பிறைச் சந்திரனை அணிந்த சடாமகுடமும், மூன்று கண்களாகிய தாமரை மலரும் மும்மரம் பொழிகின்ற கும்பம் போன்ற மத்தகமும் கொண்டு மாறுபட்ட வடிவுடன் விளையாடல் புரிகின்ற, திவ்விய யானைமுகமும், வாசனை மிக்க மாலை அணிந்த நான்கு புயங்களும், பூணூல் அணிந்த விசாலமான மார்பும், பெருவயிறும், வெண்ணிற ஆடை புனைந்த ஆனை வடிவமும், பாச அங்குசமும், சலங்கைகள்

ஒலிக்கும் உன்னிரு பாதங்களையும் கண்டு நான் வழிபட்டு வேண்ட, அதைக் கேட்டு நீ அருள் புரிய வேண்டும்! பெருமானே!

கண் பார்வை இல்லாத ஒருவர் பாடிய பாடல் போன்றா இப்பாடல் உள்ளது? உண்மையில் விநாயகப் பெருமானை, அகக்கண்ணால் தரிசித்துப்பாடியதே இது என்பதே உண்மை எனலாம்.

நமது கவிஞருக்கு, பழனியாண்டவன் மீது அளவுகடந்த பற்று. இன்று நமக்கு, இவர் பாடியதாக பெறப்படும் இலக்கியங்களில் பெரும்பான்மை பழனியாண்டவன் மீது அவர் பாடியவையே. உருகி, உருகி பழனிப் பெருமானைப் பாடுகிறார்.

"மணிகொண்ட கனகதட மகுடபந்தியும் எழில்வயங்கு ஷண்முககமலமும்
வளர்கருணை பொழிவிழியும், இளநகையும், முதுமறையின் மதுவொழுகு குமுதவாயும்
திணி கொண்ட பன்னிரண்டு தோளும், எந்நாளும் சிலம்பொலி அலம்புதாளும்
திரள் புனிதகரமும் அகல் உரமும் இடுகவசமும் சேவற் பெருந்துவசமும்
கணிகொண்ட அயிலும் நடமயிலும் மணி வெயிலும் இருகன்னியர்கள்துன்னும் ஒயிலும்
கண்டு மனமண்டுதுயர் விண்டுனது தொண்டு நான் கனிவினொடு பணிய அருள்வாய்
பணி கொண்ட கண்டகர் பயங்கொண்ட அண்டரைப்பரிவு கொண்டாண்ட தேவே
பழகு மங்களகீத முழவு கண் துயிலாத பழனியம்பதி நாதனே

\- பழனிப்பதிகம்

<u>இதன் பொருள்:</u>

பொன்னும் மணியும் புனைந்த விசாலமான மகுட வரிசையும், அழகு பிரகாசிக்கும் ஆறுமுகத்தாமரை மலரும், கருணை பொழிகின்ற கண்களும், புன்முறுவலும் முதிய வேதங்களின் தேன்வடியும் குமுத மலர் போன்ற செவ்வாயும், வல்லமை கொண்ட பன்னிரண்டு புயங்களும், எந்நாளிலும் சிலம்பின் ஒலி ஒலிக்கும் பாதங்களும், திரண்ட புனிதமான கரதலங்களும், அகன்ற மார்பும், மார்பில் அணிந்த கவசமும், சேவற்கொடியும், கூர்மை கொண்ட வேலும், மயிலும், மாணிக்க ஒளியும், இரண்டு கன்னியர்களாக தெய்வயானை, வள்ளியம்மை நெருங்கி இருக்கும் ஒயிலும், அடியேன் கண்டு மனத்தில் அண்டும் துயரம் விண்டு உனது தொண்டனாகக் கனிவினுடன் பணியும்படி அருள் புரிய வேண்டும்.

அவுணர்களின் ஏவல் கொண்டு பயம் கொண்ட தேவர்கள் மீது இரக்கம் கொண்டு ஆண்டருளிய தெய்வமே! பழகும் மங்கள கீதமுழவு வாத்தியங்கள் இரவு பகலாகக் கண் துயலாது முழங்குகின்ற பழனியம்பதியின் நாதனே, காப்பாற்ற வேண்டும்.

மாதா பிதாகுரு தெய்வங்கள் எலாம்இங்கெனக்கு
நீதான் எனைவிலக்கல் நீதிஅன்றாம் - ஆதாரம்
வேறுணர்கிலேன் பழனி வித்தகா வெவ்வினையை
நீறுசெயல் வேண்டும் இன்றே நேர்ந்து.

வாய்துதிக்கச் சென்னிவணங்கக் கரங்கள் தொழத்
தூயதுபெற்றுச் சித்தமுனைச் சூழ்ந்துருகப் - பாய்திரைப்பொற்
கஞ்ச மருந்தென் பழனிக்கார்த்திகேயா நியமித்
தஞ்சல் எனத்தேற்றி எனையாள்.

சீர்தனை குன்றுங் கவிபோல்தென் பழனியப்பாநான்
பார்தனில் நிந்திக்கப் படுவேனா - நேர்தழுவும்
தன்மையில் வைத்தின்மை பிணிசஞ்சலம் எலாம்விலக்கி
நன்னை விளைத்துண்மை நிலைநாட்டு.

விடத்தாலோ, தொல்லை வினையாலோ, வீண்சங்கடத்தாலோ
மாதர் கலவி நடத்தாலோ, வேதினாலோ
விளைந்த இந்நோயால் தேன்பழனி யாதியா
தீர்த்து ரன் உண்டாக்கு.

இப்புலவருக்கு, ‘கவிச்சிங்கம்’ என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தவர், இராமநாதபுரம் மன்னர், பொன்னுச்சாமித் தேவர். அவர், நமது புலவருக்குப் பட்டமும் வழங்கி, பொன்னாடையும் அளித்துச் சிறப்பித்தார். அதைப் பின்வரும் பாடலில் மாம்பழம் கூறி மகிழ்கிறார்.

கங்குங் குலவுகதிர் வேலான் கனகமேரு கருணைமுகில்
பொங்கம் பெறுதென் புதவைவளர் பொன்னுச்சாமி பூபன்எனக்கு
கெங்கும் திறல்கூர் "கவிச்சிங்கம்" எனும் ஓர்பெயரிட்டு
எழில்வளமை, தங்கும் புகழ்மேலாங் கலையுந் தந்தேஎனை
ஆதரித்தனனே.

சித்திரக் கவிகள் என்ற ஒருவகை யாப்பு தமிழ்க் கவிதையில் உண்டு. அதிலும் இவர் சிறந்து விளங்கினார். சித்திரக் கவிக்கு இலக்கணம் வகுத்தார்.

இவர் கண்பார்வை அற்றவராக இருந்ததால், அடிக்கடி இவர் வீட்டில் திருட்டு நடந்துள்ளது. இவர் நேராக, தாசில்தாருக்குப் புகார் அனுப்புகிறார்.

'வளமலி பழனிந் தாசில்தார் வளர் மகாராஜ ராஜ
மாதவராயரவர்கள் முன்னிலையில் வழுத்தும் விண்ணப்பம் என்னென்னில்
களவினன், சொக்கத் தலைவனாம் ஒருவன் கடும்பயலாக வந்தெதிர்த்தான்
கடிய குட்டையும் உடைப்பவனாம், தகப்பன் கைவிலங்கினை முறித்தவனாம்
உறமனை தோறும் புகுவனாம், காரைஒண்ணாது அவன்செய்தி
ஒன்றல என்றன் தனமுடிப்பு கவிழ்த்தான் உற்ற நாணயமெலாம் கவர்ந்தான்
அளவையில் வயிரக் கற்பையும் கொள்ளையடித்தனன் சாட்சி உண்டு அநேகம்
அடுந்திடு சமண சேர்த்திவைகளை விசாரித்து அமுல் செலுத்துவது உமதருமள'

மேல்கண்ட செய்யுளில், பழனியில் தாசில்தாராக விளங்கிய மாதவராயர் என்பவருக்குப் புகார் மனு ஒன்று அனுப்புகிறார். இதில் இரண்டு பொருள்கள் உள்ளன.

"மேலாகப் பார்க்கும்போது களவு செய்வதைத் தொழிலாக உடைய தலைவன்; அவன் நிறம் கருப்பு. அவன் எப்படிப்பட்ட பூட்டையும் திறந்துவிடக் கூடியவன், தன் தகப்பனுக்குப் போடப்பட்ட விலங்கையும் உடைத்தவன். வீடுகள்தோறும் புகுந்து விடுவான். அவன் செய்யும் தவறு ஒன்றல; பல. என் பணப்பையையும் அவிழ்த்தான்; என் நாணயம் அவனால் பறிபோயிற்று. என் வயிரக்கற்கள் நிறைந்த கல்பையும் பறிபோயிற்று. சாட்சிகள் அனேகம் பேர் உண்டு. ஆகவே, தாங்கள் விசாரித்து அவனைத் தண்டிக்க வேண்டும்". இது ஒரு பொருள்.

இன்னொரு பொருள்; அப்படியே பகவான் கண்ணனுக்குப் பொருந்தும்.

இவ்வாறு இருபொருள்படி பாடுவதில் இவர் வல்லவர். இவைகள் சிலேடை எனப்படும். இவரின் சிலேடைக் கவிகள் மிகவும் புகழ்பெற்றவை. இவர் பாடியுள்ள 'திருப்பழனி வெண்பா' முழுவதும் சிலேடைப் பாடல்களால் சிறந்தவை. நூறு அற்புத வெண்பாக்களில் அமைந்தவை. ஒவ்வொரு இருபத்தி ஐந்து பாடல்களும், ஒவ்வொரு வகையிற் சிறந்தவை.

இதை,

"கொற்ற வடிவேல் குமரன் பழனி வெண்பா
உற்ற இருபத்தைந்து ஓர்திறம் மேல்- பற்று இருபத்தி
ஐந்து ஓர் திறம், இருபத்து ஐந்தோர் திறம் - இருபத்தி
ஐந்து ஓர் திறமாம் அரேர்",

என்று அவரே தமது நூற்றி ஒன்றாவது வெண்பாவில் விளக்குகிறார்.

"மத்த மலரும் பணியும் மாமதியும் கொண்டு - சிறு
பத்தர் அதற்கு ஒக்கும் பழனியே - வந்தநெறி
ஓதும் அறவான் உலகில் எனை ஆளுவதுளப்
போதும் மறவான் புரம்".

இப்பாடல் சிவனடியார்களுக்கும், சிவபெருமானுக்கும் சிலேடையாக அமைந்துள்ளது.

ஞான நெறியினை உபதேசிக்கின்ற தருமவடிவினரும், என்னை ஆளுவதற்கு எப்போதும் மறவாதவருமான குமுரகுருபரன் நகரம் அறியாமையை அகற்றும், விணங்குகின்ற மேலான அறிவும் கொண்டு, சிவன் அடியார்கள் ஊமத்தைப் பூவும், பாம்பும் போல விளங்கும் பழனிமலையே ஆகும்.

இவ்வாறு ஆயிரக் கணக்கில் பாடல்கள் புனைந்துள்ளார். இவற்றில், இன்று நமக்குக் கிடைந்துள்ளவை மிகச் சிலவேயாகும்.

இவர் இயற்றிய 'சிங்கார ரசமஞ்சரி', வடமொழியில் இருந்து அவர் மொழிபெயர்த்த அருமையான மதன நூல் ஆகும். மொழிபெயர்ப்பு என்று தெரியாதவாறு, அற்புதமான பாடல்கள் கொண்ட நூல் இது. இந்நூல் பெண்களின் இலக்கணம், அவர்தம் இயல்பு இவற்றை மிகச் சிறப்பாக இயம்புகின்றது.

அதுபோன்றே, வேளுக்குறிச்சி எனும் ஊரில் வாழ்ந்த வள்ளலாகிய வேலப்ப கவுண்டர் மீது சந்திர விலாசம் எனும் நூல் இயற்றினார். சந்திர விலாசம் யமகம், மடக்கு, சிலேடை எனும் அணிகள் நிரம்பிய அற்புதப் பாமாலை.

எப்பொழுதும், பழனி முருகப் பெருமானுடைய புகழை வாழ்த்தி வணங்குகிறார். அந்தப் பாடல்களே இன்று நமக்கு அதிகம் கிடைக்கின்றன.

தேவாங்க மரபினரின் புராணத்தைப் பாடியுள்ளார். அது இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு பெருங்கவிஞனாக, மிக்க செல்வாக்கோடும், செல்வத்துடனும் வாழ்ந்த இக்கவிஞர்பெருமான் தனது 48வது வயதில் இறைவன் திருவடி அடைந்தார்.

அவர் திருவடி அடையும்போதும், பழனி முருகனை நினைத்து அருள்தர வேண்டும் என்று வெண்பா பாடினார்.

அவரது இறுதிப்பாட்டு,

‘என்ன பிழை செய்திருந்தாலும் எண்ணாமல்
அன்ன பிழை எல்லாம் அகற்றி இன்னே - நின்உபய
பாதநிழல் நல்கியெனைப் பாலித்துக் கொள் - சமயம்
நீத குகனே நம்பினேன்’.

இத்தகைய பெருங்கவிஞனை, நினைந்து போற்ற வேண்டும். அது தமிழர்தம் கடமைகளில் ஒன்று.

பணியத் தமிழ் பற்பல பாடி உனக்கு
அணியத் தெரியாதவன் நான் எனினும்
பிணியைத் தவிர் பின்னிடல் என்ன, பெரும்
தணிகைக்கு அதிபா! சரணம்! சரணம்!